## *1*

# ஒரு அறிமுகம் [1 பேதுரு]

*1 பேதுரு நிருபத்தில் உள்ளாக அமைந்துள்ள இரு ஆய்வுக் கருத்துக்கள் காணப்படுகின்றன. முதலாவது, தங்கள் விசுவாசத்திற்கு விலைசெலுத்திக் கொண்டிருந்த கிறிஸ்தவர்களைப் பேதுரு உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தார்; அவர்கள் பாடு அனுபவித்துக் கொண்டிருந்தனர். இந்த நிலையானது பாடக்கருத்தின் முக்கியத்துவத்தில் இருந்து ஒருக்காலும் தொலைவில் இருப்பதில்லை, ஆனால் அது 1:6-9, 3:13-17, 4:12-19 மற்றும் 5:9, 10 ஆகிய வசனங்களில் தெளிவாகக் காணப்பட முடியும். இரண்டாவது ஆய்வுக்கருத்து தவறு காண இயலாததாக உள்ளது: "எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று; ஆகையால் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து, ஜெபம்பண்ணுவதற்கு ஜாக்கிரதையுள்ளவர்களாயிருங்கள்" (4:7). 1:7ல் பேதுரு, "உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்" என்று கூறுகையில் இவ்விரு ஆய்வுக் கருத்துக்களும் ஒன்றுகலக்கின்றன. சிரமங்களையும் பின்னடைவுகளையும் எவ்வாறு கையாள்வது என்று கிறிஸ்தவர்களுக்குப் பேதுரு போதித்தார், மேலும் கர்த்தர் மறுபடியும் வருவார் மற்றும் அவரது மக்கள் வெற்றிகொள்வார்கள் என்பதை அவர்களுக்கு இடைவிடாது நினைவூட்டினார்.*

*சுவிசேஷங்கள் மற்றும் நடபடிகள் ஆகிய புத்தகங்களில் இருந்து நாம், பேதுருவை நன்கு தெரிந்து கொண்டிருக்கிறோம். அவரது அழைப்பையோ அல்லது சீஷத்துவத்தில் அவரது இடறுதலுக்கான முதல் முயற்சிகளைத் திரும்பவும் நினைவுக்குக் கொண்டுவருதலோ தேவையற்றது (காண்க மத்தேயு 4:18-22; 14:22-33; 16:13-23; 17:1-8; 26:31-46, 69-75). பெந்தெகொஸ்தே நாளன்று சபை தொடங்கியபோது, மற்றும் அதற்குப் பின்பு, பேதுருவின் நடத்துவத்துவப் பண்புகள் வெளிப்படையாகத் தெரிய வந்தன. நிச்சயமற்ற தன்மைகள் சீஷர்களை வாரிக்கொண்டு சென்றபோது, கடினமான கேள்விகள் அவர்களைக் கிழித்துப் பிரித்துப் போடுவதாக அச்சுறுத்தியபோது, கிறிஸ்தவர்கள் வாதிக்கப்பட்டுக் கொல்லப்பட்டபோது, பேதுரு ஒரு தூணாக, பலத்தின் கோபுரமாக இருந்தார். (காண்க: நடபடிகள் 1:15, 16; 2:14:39; 3:1-26; 4:1-22; 9:32-43; 10:1-48.) அப்போஸ்தலர்களிடையே பேதுருவின் நடத்துவத்துவப் பணிப்பொறுப்பு தரப்பட்ட நிலையில் நாம், அவர் செய்துள்ளதைக் காட்டிலும் அதிகமாகப் புதிய ஏற்பாட்டில் மாபெரும் பகுதியை எழுதியிருக்கும்படி எதிர்பார்ப்போம். பேதுருவின் எழுத்துப் பணியின் அளவானது, பவுல் அல்லது யோவான் ஆகியோரின் எழுத்துப் பணிக்குச் சமமாக இருப்பது இல்லை, ஆனால் அவரது இரண்டு சிறிய நிருபங்களிலும் அவர், கிறிஸ்துவுக்கும் அவரது மக்களுக்கும் இடையில் உள்ள உறவிற்குள்ளான உட்கண்ணோக்குகளை அளித்தார், இவை வேறு எவ்விடத்திலும் காணப்படுவதில்லை.*

*பேதுரு ஏன் இந்த நிருபத்தை எழுதினார்? அவர் குறிப்பிட்டுள்ள கிறிஸ்தவர்கள் யார்? அவர்கள் எங்கே வாழ்ந்தனர்? அவர்களின் சோதனைகளைப்*

பற்றிப் பேதுரு எவ்வாறு அறிந்தார்? அவர்களுக்கு இந்த நிருபத்தை எழுதும்போது அவர் எங்கே இருந்தார்? மற்றும் அவர் எந்த சூழ்நிலைகளின்கீழ் வாழ்ந்து கொண்டிருந்தார்? நிருபமானது அதன் செய்தியை நமக்குத் திறக்கும், மற்றும் நாம், பேதுரு மற்றும் அவர் இந்த நிருபத்தை யாருக்கு எழுதினாரோ, அந்தக் கிறிஸ்தவர்கள் ஆகியோரின் இடத்தில் நம்மை வைக்கும்போது, இந்த நிருபத்தின் தைரியம், நம்பிக்கை மற்றும் சந்தோஷம் ஆகியவற்றில் இணைந்துகொள்வோம்.

## எழுதிய வேளை

அப்போஸ்தலருடைய நடபடிகளின் தொடக்க அதிகாரங்களுக்குப் பின்பு, பேதுருவின் பிரசங்கம் மற்றும் ஊழியம் ஆகியவற்றைப் பற்றிச் சிறிதளவே அறியப்படுகிறது. அவரைப் பற்றி அவ்வப்போதான குறிப்புகளை மாத்திரமே நாம் கண்டறிகிறோம். கலாத்தியருக்கு எழுதிய நிருபத்தில் அவர் அந்தியோகியாவில் இருந்ததாகப் பவுலினால் குறிப்பிடப்பட்டுள்ளது (கலாத்தியர் 2:11), மற்றும் அவர் கொரிந்து நகரில் இருந்ததாகவும் தோன்றுகிறது (1 கொரிந்தியர் 1:12). நேரடியான தகவல் சிறிதளவே நமக்கு உள்ளது, ஆனால் பேதுரு சும்மா இருக்கவில்லை என்பது தெளிவாக உள்ளது. அவரது ஊழியப்பயணங்கள் பவுலின் ஊழியப்பயணங்களுடன் ஒன்றாகவே வளர்ந்திருக்கச் சாத்தியம் உண்டு, அவ்வாறே நடந்தும் இருக்கலாம். 1 பேதுரு 1:1ல் உள்ள தொடக்க உரையின் பரப்புக்குப் பின்னால் விரிவான ஊழிய முயற்சிகள் இருக்கலாம்.

கி.பி. 60களின் மத்திய காலத்தில், பேதுருவும் பவுலும் ரோமாபுரிக்குக் கட்டாயமாகக் கூட்டிச் செல்லப்பட்டிருக்கவேண்டும். இவ்விருவருமே ரோமாபுரியில் இறந்தனர் என்று, 90களின் மையக்கால கட்டத்தில், ரோமா புரி சபையில் இருந்து கொரிந்து சபைக்கு அனுப்பப்பட்ட, 1 கிளெமென்ட் என்று அறியப்பட்ட ஒரு நிருபம் கருத்துத் தெரிவித்தது. பவுல், தமது கடைசி நிருபமான 2 தீமோத்தேயு நிருபத்தை, ரோமாபுரியில் இருந்து எழுதினார் என்று தோன்றுகிறது. மற்றும், 1 பேதுரு 5:13ல் பாபிலோன் என்பதற்கான உள்ளார்ந்த கருத்தானது, [ரோமாபுரி] நகரத்தைப் பற்றி, எழுத்தாளரின் கருத்தாக இருக்க வாய்ப்புள்ளது. எவ்வகையிலும், ரோமாபுரியானது வெளிப்படுத்தின விசேஷத்தில், பாபிலோன் என்று அழைக்கப்பட்டுள்ளது (வெளிப்படுத்தின விசேஷம் 17:5, 18), இந்தப் புத்தகமானது, 1 பேதுரு நிருபம் எந்த சபைகளுக்கு எழுதப்பட்டதோ அதே சபைகளில் சிலவற்றிற்கு எழுதப்பட்டதாகும். பாபிலோன் பற்றிய குறிப்பானது, பேதுரு ரோமாபுரியில் இருந்தார் என்ற பாரம்பரியத்திற்கு ஆதரவைக் கூட்டுகிறது. அவர் கி.பி. சுமார்67ல் வேதசாட்சியாக மரித்தார்; அவரது முதல் நிருபம், அவரது மரணத்திற்கு இரு ஆண்டுகளுக்கு முன்னால் எழுதப்பட்டிருக்க வாய்ப்புள்ளது. உலகத் தின் எல்லாப் பகுதிகளிலும் இருந்தும் ரோமாபுரிக்குப் பயணிகள் நித்தமும் வந்து சேர்ந்தனர். அவர்களில் சிலர் கிறிஸ்தவர்களாக இருந்தனர், அவர்களிடமிருந்து பேதுரு, ஆசியா மைனர் பகுதியில் இருந்த சபைகளின் தேவைகள் மற்றும் சோதனைகள் ஆகியவற்றை அறிந்தார். இது இந்த நிருபத்தை எழுதுவதற்கான சந்தர்ப்பத்தை அவருக்கு அளித்ததாகக் காணப்படுகிறது.

# வாசகர்களும் அவர்களுக்கு நேர்ந்த சோதனைகளும்

*பேதுருவின் முதல் நிருபம், ஒரு விசாலமான எல்லைப் பகுதிக்கு, தோராயமாக நவீன காலத் துருக்கியான, ஆசியா மைனரின் எல்லாப் பகுதிக்கு அத்தியாவசியமாக எழுதப்பட்டது. முதல் நூற்றாண்டின் மையக்காலகட்டத்தில், 1 பேதுரு நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள - பொந்து, கலாத்தியா, கப்பதோக்கியா, ஆசியா மற்றும் பித்தினியா என்ற - ஐந்து பகுதிகள், நான்கு மாபெரும் ரோமமாகாணங்களில் அடங்கியிருந்தன. பொந்துவின் அதிகமான பகுதி, பாம்ப்பே என்ற ரோம அதிகாரியால் பித்தினியாவுடன் இணைக்கப்பட்டது. கலாத்தியா மற்றும் கப்பதோக்கியா ஆகிய மாகாணங்களுக்குச் சிறு நிலப்பகுதிகளே ஒதுக்கப்பட்டிருந்தது, பொந்து - பித்தினியா என்பவை, கருங்கடல் கரையின்மீது ஆசியா மைனரின் வடக்கு மற்றும் மேற்குப் பகுதியின் குறுக்கே நீண்டு விரிந்திருந்த ஒரு மாகாணமாக இருந்தது. கப்பதோக்கியா கிழக்கு எல்லைக் கோடியில் இருந்த மாகாணமாகும், இது சார்பளவில் தொலைதூரத்திலும் தொடர்புகொள்ள இயலாத வகையிலும் இருந்தது. கலாத்தியா, அந்தத் துணைக்கண்டத்தின் மத்தியில் மாபெரும் நிலப்பகுதியைக் கொண்டிருந்தது. ஆசியா மாகாணம் அந்தப் பகுதியின் வைரமாக இருந்தது, இது ஏஜியன் கடல்மீது மேற்கில் அமைந்து, வளமையான கிரேக்க நகரங்களால் நிறைந்திருந்தது. பொந்து மற்றும் கப்பதோக்கியா போன்ற தொலைதூரப் பகுதிகளில் கி.பி. 60களின் மையக் காலகட்டத்தில் சபையானது எவ்வளவு பலம் வாய்ந்ததாக இருந்தது என்று அறிவது கடினமாகும், ஆனால் இவ்விரு பகுதிகளிலும் இருந்து பார்வையாளர்கள், பெந்தெகொஸ்தே நாளன்று பேதுரு பிரசங்கித்த வேளையில் எருசலேமில் இருந்தனர் (நடபடிகள் 2:9).*

*கிறிஸ்தவர்களுக்கும் அவர்கள் வாழ்ந்த இடங்களில் இருந்த பெரும் சமூகங்களுக்கும் இடையில் போராட்டங்கள் வளர்ந்திருந்தன. அவர்களின் விசுவாசம் அக்கினியால் சோதிக்கப்படுவதாகப் பேதுரு குறிப்பிட்டார் (1:7) மற்றும் அவர்கள் அனுபவித்துக் கொண்டிருந்த "பற்றியெரிகிற அக்கினியை"ப் பற்றிக்குறிப்பிட்டார் (4:12). அவர்களின் பாடுகளினுடைய ஆதாரமூலத்தைப் பற்றிக் கூறுவதற்கு அவர் சிறிதளவே விஷயம் கொண்டிருந்தார். அவற்றில் சில, அவர்களைப் பழித்துரைத்து வாழ்வைப் பொதுவாகக் கடினமாக்கிய அவர்களின் அயலகத்தவர்களிடம் இருந்து முறையற்ற வகையில் வந்திருக்கலாம். அனேகமாக, புதிய தத்துவங்களைப் பற்றி அடிக்கடி எழும், தவறான முன் அனுமானம் மற்றும் கசப்புணர்வு ஆகியவை, கிறிஸ்தவர்கள்மீது குற்றம் சாட்டப்பட்டு அவர்கள் நகர அலுவலர்கள் முன்பாகக் கட்டி இழுத்துச் செல்லப்படக் காரணமாக இருந்திருக்கலாம். சிலர் அடிக்கப்பட்டிருக்க வாய்ப்புள்ளது; மற்றவர்கள் கொல்லப்பட்டனர். கிறிஸ்தவர்கள் மகிழ்வுடன் அனுபவித்த இரட்சிப்பின் மாபெரும் தன்மை பற்றிப் பேதுரு அவர்களுக்கு நினைவூட்டினார் (1:2, 9). அவர்கள் மீட்கப்பட்டு பரிசுத்தமாக்கப்பட்டிருந்தனர் (1:15, 16, 18, 23). இயேசு மறுபடியும் வரவேண்டி இருந்தது (1:7, 13; 4:7). வேதனையின் மத்தியில், சந்தோஷம் மற்றும் மகிழ்ச்சி ஆகியவற்றிற்குக் காரணம் இருந்தது (1:8). எல்லாவற்றிற்கும் மேலாக, அவர்கள் தங்களை அவிசுவாசிகள் வெறுப்பதற்கு உண்மையான காரணம் எதையும் தரக்கூடாதிருந்தது (2:12).*

அவர்கள் பரிசுத்தர்களாக நல்லவர்களாக இருக்க வேண்டியிருந்தது (2:1, 2), தங்களுக்குச் செய்யப்பட்ட பொல்லாப்புகளுக்கு மாற்றாக இரக்கம் செய்ய வேண்டியிருந்தது (3:9). அவர்களின் உபத்திரவமும்கூட, விசுவாசத்தை மறு உறுதிப்படுத்தவும் இயேசுவே மனிதகுலம் முழுமைக்கும் மீட்பராக இருந்தார் என்பதற்குச் சாட்சியம் அளிக்கவும் ஒரு சந்தர்ப்பமாக இருக்க வேண்டியதாயிற்று (1:7).

---

## 1 பேதுரு நிருபத்திற்கான ஒரு வரைகுறிப்பு

இந்த வரைகுறிப்பை நீங்கள் ஆய்வு செய்கையில், ஒன்றுடன் ஒன்று தொடர்புள்ளவையான, இந்த நிருபத்தின் இரு ஆய்வுக்கருத்துக்களை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்: (1) பாடு அனுபவித்தல் என்பது கிறிஸ்தவ வாழ்வில் எதிர்பார்க்கப்படும் பகுதியாக உள்ளது, மற்றும் (2) கர்த்தர் தமக்குச் சொந்த மானவர்களை உரிமைகோரத் திரும்பவும் வருகிறார்.

வாழ்த்து: தேவனால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்களுக்குப் பேதுரு (1:1, 2).

**I. ஜீவனுள்ள நம்பிக்கையில் சந்தோஷமாயிருத்தல் (1:3-12).**
- A. இயேசு ஜீவிக்கிறார் என்பதால் நம்பிக்கை ஜீவிக்கிறது (1:3-5).
- B. துன்பம் இருந்தபோதிலும் சந்தோஷம் ஜீவிக்கிறது (1:6-9).
- C. தீர்க்கதரிசிகளின் ஊழியத்தின் மூலமாக ஊக்கப்படுத்துதல் ஜீவிக்கிறது (1:10-12).

**II. "நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்" (1:13-25).**
- A. பரிசுத்த பிள்ளைகளைப் போலக் கீழ்ப்படிந்திருத்தல் (1:13-17).
- B. கிறிஸ்துவின் இரத்தத்தினால் மீட்கப்படுதல் (1:18-21).
- C. அழியாத வித்தினாலே பிறத்தல் (1:22-25).

**III. சீயோனில் வைக்கப்பட்ட கல்லின்மீது நம்பிக்கையாயிருங்கள் (2:1-10).**
- A. புதிதாய்ப் பிறந்த பிள்ளைகளுக்குக் களங்கமில்லாத பால் (2:1-3).
- B. மனிதரால் தள்ளப்பட்டதாயினும் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட கல் (2:4-8).
- C. ராஜரீகமான ஆசாரியக்கூட்டம், பரிசுத்த ஜாதி (2:9, 10).

**IV. கீழ்ப்படிதல் உள்ளவர்களாயிருந்து தேவபக்தியுள்ள வாழ்வை வாழுங்கள் (2:11-25).**
- A. எவரொருவரும் குற்றஞ்சாட்டக் கூடாத அளவுக்கு தேவபக்தியுள்ளவர்களாக வாழுங்கள் (2:11, 12).
- B. நன்மை செய்து புத்தியீன மனிதருடைய அறியாமையை அடக்குங்கள் (2:13-17).
- C. கர்த்தருடைய உதாரணத்தைக் கண்ணோக்குங்கள் (2:18-25).

**V. தகுதியான வகையில் உங்களை அலங்கரித்துக் கொண்டு காருண்யமாயிருங்கள் (3:1-7).**
- A. சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாக உள்ளான அழகு (3:1-4).
- B. கடந்த காலத்தில் இருந்த தேவபக்தியுள்ள பெண்களில் இருந்து உதாரணங்கள் (3:5. 6).
- C. கரிசனம் மற்றும் மதித்தல் ஆகியவற்றின் புருஷத்தன்மை (3:7).

**VI. கேட்கிற யாவருக்கும் தற்காப்பு உரையொன்றைக் கூறுங்கள் (3:8-22).**
- A. அவமானப் படுத்துதல்களுக்கு ஆசீர்வாதத்தினால் பதில் அளித்தல்

*(3:8-12).*

B. *பழிதூற்றுதலுக்கு நியாயமானதன்மீது வைராக்கியத்தைக் கொண்டு பதில் அளித்தல் (3:13-17).*

C. *குற்றச்சாட்டுகளுக்குச் சிலுவையின் செய்தியைக் கொண்டு பதில் அளித்தல் (3:18-22).*

**VII. *எல்லாவற்றிலேயும் தேவனை மகிமைப்படுத்துங்கள் (4:1-11).***

A. *கிறிஸ்துவின் சிந்தையை ஆயுதமாகத் தரித்துக் கொள்ளுங்கள் (4:1-3).*

B. *பயனின்றி வீணாகக் கழியும் வாழ்வை மறுத்தல் (4:4-6).*

C. *எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று என்று புரிந்து கொள்ளுதல் (4:7-11).*

**VIII. *கிறிஸ்துவின் பாடுகளில் பங்கேற்றிருங்கள் (4:12-19).***

A. *பாடுகளைக் கண்டு திகைப்படைய வேண்டாம் (4:12-15).*

B. *அவரது நாமத்தைத் தரித்துக்கொள்ள வெட்கப்படாதிருங்கள் (4:16-18).*

C. *உண்மையுள்ள சிருஷ்டிகர்த்தாவுக்கு உங்கள் ஆத்துமாக்களை ஒப்புக்கொடுக்க அஞ்சாதிருங்கள் (4:19).*

**IX. *மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள் (5:1-11).***

A. *சகமூப்பர்களுக்கு ஒரு வேண்டுகோள் (5:1-4).*

B. *கர்த்தர் மீது கவலையை வைத்துவிடும்படி வேண்டுகோள் (5:5-7).*

C. *சகோதரத்துவத்துடன் நிற்பதற்கு ஒரு வேண்டுகோள் (5:8-11).*

*முடிவுரை: தனிப்பட்ட வாழ்த்து (5:12-14).*